# யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2015

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

| தரம் :- 10 | சுட்டெண்:- ........................................ | நேரம்:- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

❖ பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

01) மனிதன் தனது தேவை விருப்பங்களை எதனூடாக நிறைவு செய்கின்றான்?
1) பரிமாற்றத்தினூடாக 2) பண்டமாற்றினூடாக
3) வணிக நிறுவனங்களினூடாக 4) உழைப்பினூடாக

02) பல்வேறு தரப்பினரும் தம்மிடம் இருக்கும் திறமைகளையும் வளங்களையும் சிறப்பாகப் பயன்படுத்தி உற்பத்தி செய்தனர். இவ் உற்பத்தி
1) நேர் உற்பத்தி 2) பாரியளவு உற்பத்தி
3) சிறிதளவு உற்பத்தி 4) சிறப்பு உற்பத்தி

03) பண்டமாற்றிற்கு அடிப்படையாக அமைந்தது
1) மிகை உற்பத்தி 2) சுய உற்பத்தி 3) விருப்பம் 4) பணம்

04) நோக்கத்தின் அடிப்படையில் இலாப நோக்கமின்றி செயற்படும் நிறுவனங்கள் எத்துறை?
1) தனியார் துறை 2) சேவை வணிகம் 3) பொருள் வணிகம் 4) அரச துறை

05) இன்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் விரைவான வளர்ச்சியினூடாக வணிகத்தில் ஏற்பட்ட மாற்றம்
1) இலத்திரனியல் வணிகம் 2) பணப்பரிமாற்றம்
3) தொடர்பாடல் 4) சந்தர்ப்பம்

06) தொட்டுணரக்கூடிய, பௌதிகத்தன்மை கொண்ட உற்பத்தி வணிகம் எவ்வாறு அழைக்கப்படும்?
1) சேவை உற்பத்தி 2) பொருள் உற்பத்தி
3) நேரில் உற்பத்தி 4) நேர் உற்பத்தி

07) வணிக நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் உரிமையாளர்களின் தீர்மானங்களை செயற்படுத்தும் நபர்களை எவ்வாறு கூறலாம்?
1) உரிமையாளர் 2) முகாமையாளர் 3) போட்டியாளர் 4) சமூகம்

08) பின்வருவனவற்றுள் எது நெடுவாழ்வுத் தன்மையையும் எதிர்கால அபிவிருத்தியையும் நிர்ணயிக்கும் காரணி
1) அரசாங்கத்தின் தொடர்பு
2) ஊழியர் தொடர்பு
3) அக்கறை செலுத்தும் தரப்பினரின் நெருங்கிய தொடர்பு
4) உற்பத்தியாளரின் நெருங்கிய தொடர்பு

09) வெற்றிகரமான வணிகமொன்று எந்த நேரத்திலும் கூடிய கவனம் செலுத்த வேண்டியது எது?
1) அகச்சூழல் 2) புறச்சூழல்
3) பொருளாதாரச் சூழல் 4) வணிகச் சூழல்



kalvi.lk

10) உரிமையின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்கம் எத்துறை வணிக அமைப்பிற்குள் அடங்கும்.

1) தனியார்துறை 2) பொதுத்துறை 3) தனியாள் உரிமை 4) சங்க வகைகள்

❖ **பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினை இடைவெளியில் எழுதுக.**

01) பொழுதுபோக்கு ஒரு ........................................................................................ ஆகும்.

02) மொத்த வியாபாரம், வங்கிகள் ........................................................ உற்பத்தி வணிகமாகும்.

03) வழங்கப்பட்ட கடன்களை உரிய காலத்தில் மீள பெற்றுக் கொள்ளல் என்ற நோக்கத்தை கொண்ட அக்கறை செலுத்தும் தரப்பினராக .................................... காணப்படுகின்றனர்.

04) வணிக செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அகச் செயற்பாட்டில் ஈடுபடும் பலவேறு பிரிவினர்களும் ............................................................ சூழல் எனப்படும்.

05) புதிய நகரங்களை உருவாக்குதல் வணிகமொன்றிற்கு ........................................ ஆகும்.

06) வாண்மைத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்குப் பொருத்தமான வணிக அமைப்பு ........................................................ ஆகும்.

07) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் ............................................................ சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

08) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் உரிமையாளர்கள் ...................................................... கொள்வனவு செய்த பங்குதாரர் ஆவார்.

09) கூட்டுறவுச் சங்கத்தில் ஆகக் குறைந்தது ................................................ அங்கத்தவர்கள் காணப்பட வேண்டும்.

10) இலங்கை துறைமுக அதிகாரசபை ................................................ அரசதுறை வணிக அமைப்பிற்கு உதாரணமாகும்.

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி - II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) சுருக்கமான விடை தருக.

i) மிகை உற்பத்தியை ஏனைய தரப்பினருடன் பரிமாற்றி தமக்குத் தேவையான ஏனைய பண்டங்களை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வது எவ்வாறு அழைக்கப்படும்?

ii) மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் நடவடிக்கை எது?

iii) உற்பத்திகளின் தன்மைக்கமைய வணிகங்களின் வகைகள் எவை?

iv) உற்பத்திக் காரணிகளாக எவை கருதப்படுகின்றன?

v) உலக நாடுகளுக்கிடையே பொருளாதார, சமூக, கலாசாரம் போன்றவற்றில் காணப்படும் நெருக்கமான தொடர்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

vi) வணிகத்தின் அகச் சூழலை அறிவதன் ஊடாக எவை இனங்காணப்படுகிறது?

vii) பங்குடைமை வணிகத்தில் தாக்கஞ் செலுத்தும் சட்டம் எது?

viii) உமது சமூகத்தில் காணப்படும் "சங்க அமைப்புக்கள்" 3இனைத் தருக.

ix) தனியாள் உரிமை வணிகமொன்றினை ஆரம்பித்து எத்தனை நாட்களிற்குள் வணிகப் பெயரைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்?

x) சட்ட ஆளுமை உடைய நிறுவன அமைப்புக்கள் எவை?



kalvi.lk

02)

i) பொதுவாகக் காணப்படக்கூடிய வணிக நோக்கங்கள் எவை?

ii) மாணவன் ஒருவனின் இரண்டு தேவைகளையும், அவை ஒவ்வொன்றும் நிறைவேற்றப்படும் முறைகளையும் குறிப்பிடுக.

iii) முயற்சியாளன் ஒருவன் எவ்வாறு இருக்க வேண்டும்?

iv) வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர் நால்வரைக் குறிப்பிடுக.

v) பண்டங்கள் சந்தைக்கு வழங்கப்படும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

03)

i) வணிகச் சூழலினை வகைப்படுத்துக.

ii) பொருளாதாரச் சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.

iii) வணிகத்தில் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகள் இரண்டினைத் தருக.

iv) வணிகமொன்றின் புறச் சூழலினை அறிவதன் ஊடாக இனங்கண்டு கொள்ளக்கூடியவை எவை? அவை ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக.

v) தொழில்நுட்பச் சூழல் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.

04)

i) வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் நியதிகள் எவை?

ii) தனியாள் உரிமை வணிகத்தில் காணப்படும் பண்புகள் எவை?

iii) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் அனுகூலங்களைக் குறிப்பிடுக.

iv) அரச கூட்டுஸ்தாபனங்களில் காணப்படும் விசேட பண்புகள் எவை?

v) தனியாள் உரிமை வணிகமொன்றைப் பதிவு செய்வதனால் பெறக்கூடிய அனுகூலங்கள் எவை?

05) சில வணிக நிறுவனங்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வரையறுக்கப்பட்ட அபான்ஸ் கம்பனி
கமலா ஸ்ரோர்ஸ்
கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
இலங்கைத் தபால் திணைக்களம்
இலங்கை ரூபவாகினிக் கூட்டுஸ்தாபனம்
இலங்கை மின்சார சபை

i) மேற்காட்டிய ஒவ்வொரு நிறுவனத்திற்குரிய வணிக அமைப்பு வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

ii) அவ் வணிக நிறுவனங்களை உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

iii) வணிகங்களை நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தி மேற்காட்டிய வணிகங்களை அவ்வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்துக.

iv) "சங்கரப்பிள்ளையும் சகோதரர்களும்" என்ற வணிக அமைப்பின் பிரதிகூலங்கள் எவை?

v) இவ்வணிக நிறுவனங்கள் மூலதனத்தினைப் பெற்றுக்கொள்ளும் முறையினைத் தனித்தனியாகச் சுட்டிக் காட்டுக.


kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457